**செப்டம்பர் - 10**

**"கெட்டவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனம் உண்டாகும்படி பேசுங்கள்." - எபே 4 : 29.**

உண்மை பேசுவது எப்பொழுதும் சரியானதென்றும், ஆகையால் உண்மை பேசுவது அவதூறு ஆகுமென்று தேவன் கருதியிருக்கமாட்டார் என்றும், ஆனால், தூஷணத்தையும் அவதூரையும், மாம்சத்தின் கிரியைகள் என்றும், பிசாசின் கிரியைகள் என்றும் அவர் கண்டனம் செய்யும் போது அவர் பொய்யானதையும், மெய்யல்லாததையும் பேசுவதையே அவதூறு என்று எண்ணியிருப்பார் என்றும் சீரழிந்த நாவு மனசாட்சியின் வேலிக்கு பின்னாலிருந்துகொண்டு அறிவிக்கிறது இது பெரிய தவறு. அவதூறில் சம்பந்தப்பட்ட விஷயம் உண்மையாயிருந்தாலும் பொய்யாயிருந்தாலும், அவதூறு சமமான அவதூறுதான். தேவனுடைய பிரமாணத்தில் மட்டுமல்லாமல், நாகரீகமடைந்த மனிதரின் சட்டங்களிலும் கூட அவ்விதமாகவே கருதப்படுகிறது. மற்றொருவருக்கு கெடுதி உண்டுபண்ண வேண்டுமென்ற நோக்கத்தோடு செல்லப்படுகிற எதுவாயிருந்தாலும், உண்மையாயிருந்தாலும் சரி பொய்யாய் இருந்தாலும் சரி, அது அவதூறுதான். இவ்விதமாக மற்றவருக்குக் கெடுதி உண்டுபண்ணுவது தவறு என்று மனிதனுடைய சட்டம் தேவனுடைய பிரமாணத்துடன் ஒத்துப் போகிறது. **- Z ’99, 70 (R 2442)**

சரீர பிரகாரமாகவும், மனது சம்பந்தமாகவும் நல் நடத்தை சம்பந்தமாகவும், மத சம்பந்தமாகவும், மற்றவர்களை கெடுக்கும் போக்குடைய எல்லா பேச்சுக்களும் கெட்டவைகளே. இப்படிப்பட்டவை எவ்வளவோ பேசப்பட்டிருக்கிறது. ஆகையால், எதிரிடையாக அதன் செல்வாக்கைத்தடுக்க நாம் எச்சரிக்கையுள்ளவர்களாயிருக்க வேண்டும். பூமிக்கு உப்பாக இருக்கிற நாம், ஜனங்களுடைய சரீரத்திலும், மனதிலும், இருதயத்திலும், சாரமாக்கக்கூடிய போஷிக்கக்கூடிய பக்குவப்படுத்தக்கூடிய விளைவுகளை உண்டு பண்ணுகிற கருத்துக்களை மட்டும் நாம் வெளியிட வேண்டும். உலகத்தில், வார்த்தைகளே மிகவும் சக்தி வாய்ந்தவைகள். கூடுமானவரை தேவனுடைய கருத்துக்களை மட்டும் வெளியிட நம்முடைய பேச்சுக்களை உபயோகிப்போமாக. அதன் மூலமாக சரியான இருதயத்தையுடையவர்களுக்கு நாம் ஒரு ஆசீர்வாதமாக இருக்கிறோம் என்பதை நிரூபிப்போம். **- P ’36, 110.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**சங் 5:9; 52:2; 73:7-9; 1கொரி 15:33; எபே 5:3,4; கொலோ 3:8; 4:6; 1தெச5:11; கொலோ 3:16; உபா 6:6,7; மல்கி 3:16,17; நீதி 15:7; மத் 12:36,37; தீத் 3:2; யாக் 3:2 -8; 4:11; 1பேது 2:1.**

**கோபுர வாசிப்பு : Z ’11, 62 (R 4770).**

**வினாக்கள் : இவ்வார பேச்சுக்களின் தன்மை என்ன? அது ஏன் அப்படி இருந்தது? அதன் பலன் என்ன?**